# கொழும்பு பல்கலைக்கழகம்

## கலைப்பீடம்

## சிறப்புக் கலைமாணிப் பரீட்சை, பகுதி III, 2018/19

## GYG 4284 - கிராமிய மற்றும் பிரதேச அபிவிருத்தி

**இரண்டாம் பருவம், இறுதிப் பரீட்சை**

**நேரம்: 2 மணி**

*மூன்று* **(3) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

(1) (i) அபிவிருத்தி என்னும் பதத்தினை வரையறை செய்க (04 புள்ளிகள்)

(ii) கீழுழைப்பின் (Underdevelopment) பிரதான பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டியாக தலா வருமானம் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க. (10 புள்ளிகள்)

(2) (i) நாடொன்றின் "பொருளாதார வளர்ச்சி" என்னும் கருத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) நாடொன்றின் அபிவிருத்திச் செயன்முறையில் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தினை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) றொஸ்ரோவின் அபிவிருத்தி மாதிரியில் பொருளாதார வளர்ச்சி நிலைகளுடன் தொடர்புபட்ட முனைப்பான அம்சங்களை உதாரணங்களுடன் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

(3) (i) தேசிய திட்டமிடலுக்கும் உள்ளூர் மட்ட திட்டமிடலுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கையில் மேற்கொள்ளப்படும் தேசிய திட்டங்களினால் (National Plans) பெருமளவு நன்மைகள் ஏற்படாமைக்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) "மக்களுடனான திட்டமிடல்" (Planning with Peoples) என்பதுடன் தொடர்பான முறைகளை நாம் பயன்படுத்தினால் மிகவும் வெற்றிகரமாகப் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்வது சாத்தியமாகலாம். உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(4) (i) செயற்றிட்ட முன்மொழிவு என்பதன் கருத்து யாது? (04 புள்ளிகள்)

(ii) செயற்றிட்ட முன் மொழிவொன்றின் பிரதான கூறுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) செயற்றிட்டமொன்றின் நிதிப் பகுப்பாய்வின் (Financial Analysis) நோக்கங்களை ஆராய்க (10 புள்ளிகள்)

(5) (i) செயற்றிட்டமொன்றின் பொருத்தப்பாட்டு ஆய்வு (Feasibility Study) என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (04 புள்ளிகள்)

(ii) செயற்றிட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு முன்னராக மேற்கொள்ளப்படும் பொருத்தப்பாட்டு ஆய்வின் முக்கியத்துவத்தினை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iii) பொருத்தப்பாட்டு ஆய்வொன்றில் உள்ளடக்கக்கூடிய பிரதான அம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

(6) (i) இலங்கையின் பிரதேச அபிவிருத்தியைப் பாதிக்கின்ற பிரதான காரணிகள் எவையென்பதைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பிரதேச அபிவிருத்தியை மேலே கூறப்பட்ட காரணிகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் பிரதேச அபிவிருத்தியுடன் தொடர்பான இப் பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய பொருத்தமான தீர்வுகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

**XXXX**